# உயிர்த்தெழுதல்

"மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும் மூன்றாம் நாளில் எழுந்திருக்கவும் வேண்டும்."
-லூக்கா 24:7

1. பற்பல காலக்கட்டங்களில் தோன்றின பிரசித்திப்பெற்ற வீரர்களுக்கு, சரித்திரம் அடிக்கடி அன்பற்றதாயிருக்கிறது. பொதுமக்களின் அலைபாயும் ஒத்துணர்வுகளாலும், மாறும் மதிப்புகளாலும், காலப்போக்கில் மாறிப்போகிற எழுச்சி, பிரசித்திப் பெற்றவர்களின் புகழ்களை சடுதியில் விழுந்து போகச் செய்திருக்கிறது. ஆனால் நூற்றுக்கணக்கான வருடங்களாக, இயேசுவின் நாமமும், அவரது ஊழியமும், அவரது மரணமும், மாற்றமில்லாது நம்மிடத்தில் தெளிவாக வந்திருக்கிறது.

2. அவருக்கு விரோதமாக குற்றங்கண்டு பிடித்து விமர்சிக்கிறவர்களின் எல்லாவிதமான கடுந்தாக்குதல்களால், அவருடைய ஜீவனின் வல்லமையையோ அல்லது அவரது மரணத்தின் நிகழ்ச்சிகளின் சரித்திரத்தையோ, அல்லது சரித்திரத்தின் மைய நிகழ்ச்சியான அவரது உயித்தெழுதலையோ மங்கிப் போகச் செய்ய முடியவில்லை.

3. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலான பலன்கள் அவரை விசுவாசித்திருக்கிறவர்களுக்கும், இனி விசுவாசிக்கிறவர்களுக்கும் கணித்தற்கரியதாயிருக்கின்றன. நமது இரட்சகர் உயிர்த்தெழுந்ததிலிருந்து பாய்ந்தோடி வருகிற ஆசீர்வாதங்களை எடுத்துக்காட்டி பாஸ்டர் பால் S.L. ஜான்ஸன் கொடுத்த பிரசங்கத்தை இந்தப் பத்திரிக்கையில் வெளியிடுகிறோம். இது நம்முடைய வாசகர்களுக்கு ஆன்மீக பலனைத் தருவதாக.

4. கிறிஸ்தவர்களின் மனங்களுக்கு 1கொரி 15:21-23 வேதபகுதி உயித்தெழுதலைப் பற்றிய சிந்தையை கொண்டு வருகிறது. வேதாகமத்தில் மீட்கும் பொருளுக்கு அடுத்ததாக வேறு எந்த கருத்தையும் விட உயித்தெழுதலுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தாற்பரியம் எந்தவொரு தாற்பரியத்தையும் விட மிகவும் அதிகமாய் தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. உயிர்த்தெழுதலைப் பற்றிய சரியான கருத்து கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடிப்படையாயிருக்கிறது. வருங்கால ஜீவியத்தின் மறுமைக்குரிய வாழ்வின் எல்லா நம்பிக்கைகளும் இதனையே சார்ந்திருக்கின்றன. வேதாகமம் இதனை வற்புறுத்திக் கூறுவதால் அதன் முக்கியத்துவத்தை நாம் அறிந்து ஏற்றுக் கொண்டு அதைக் குறித்து நம்முடைய பரமபிதாவின் வார்த்தைகளை அறிந்து கொள்ள வேண்டும். இந்த பாடக் கருத்து அதிகம் பரந்து இருப்பதால் அதன் எல்லாக் கட்டங்களையும் நாம் ஆராய முற்படாது, நம்முடைய பாட வசனத்துக்குள் வரைப்படுத்திக் கொள்வோமாக.

## மூன்று மையக்கருத்துக்கள்

5. வேதவாக்கியத்தில் கவனமான ஆராய்ச்சி, உயிர்த்தெழுதலைப் பற்றிய மூன்று மையக் கருத்துக்களைக் கொடுக்கிறது. அதாவது (i) அதன்முன் நிகழ்வுகள் (its antecedents) (ii) அதன் தன்மை (its nature) (iii) அதன் வகைகள் (its kinds).

6. தேவன் ஆதாமை சிருஷ்டித்த போது மனிதன் பாவத்தில் விழுவான் என்று அறிந்திருந்தார். சிருஷ்டியான மனிதனுக்கு அவனது சிருஷ்டிப்பின் பூரணத்தில் அவன் விரும்புகிற எந்தவொரு வாழ்க்கை போக்கையும் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு சுயாதீன சித்தம் கொடுக்கப்பட்டிருந்தது. அவன் தன்னுடைய சுயாதீனத்தை தவறாகப் பயன்படுத்தினான், என்றபோதிலும் தேவன் அதனை முன்கூட்டியே அறிந்திருக்கிறபடியால் அது, அவரை தம்முடைய வேலையிலிருந்து ஒருபோதும் பின்னடையச் செய்யவில்லை. அப்பொழுதிலிருந்தேமனுக்குலத்திர்காக மீட்கும் பொருளை, தேவ ஆட்டுக்குட்டியை பரிபாலித்து வைத்திருந்தார். 1பேது 1:19,20; 1கொரி 2:7; வெளி 13:8 மனுக்குலத்திற்கு தீமையோடுள்ள ஒரு அனுபவம் மிகவும் பிரயோஜனமான பாடமாக இருக்குமென்றும், மனுக்குலம் அந்தப் பாடத்தைப் படித்த பின்பு, வேறு எந்த முறையிலும் அடையமுடியாத அளவுக்கு நீதியோடு இணக்கமாய் மனுக்குலத்தை கொண்டு வரமுடியும் என்றும் தேவன் முன்கூட்டியே கண்டார்.

## உயிர்த்தெழுதலின் முன் நிகழ்வுகள்

முதல் முன் நிகழ்வு : பாவத்தின் சம்பளம் மரணம்.

7. உயிர்த்து எழுவதற்கு முன்னதாக, உயிரோடு இருந்த நிலையிலிருந்து உயிரற்ற நிலைக்குச் சென்றிருக்க வேண்டும். ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட பின்பு, நித்திய ஜீவனோடு அல்லாது பரிபூரண ஜீவனோடு சோதனைக்குள் நிறுத்தப்பட்டான். அவனுடைய சிருஷ்டிகருடைய ஞானமான பிரமாணங்களுக்கு எவ்வளவு காலம் கீழ்ப்படிகிறானோ அவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து இருக்க பூரண ஜீவனோடு பரீட்சையில் நிறுத்தப்பட்டான்.

8. ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட பின்பு, அவனுடைய சிருஷ்டிகருடைய ஞானமான பிரமாணத்துக்குக், கீழ்படிந்திருக்கும் காலம் வரை தொடர்ந்து இருக்க பூரண ஜீவியத்தில் பரீட்சையில் நிறுத்தப்பட்டான். ஆனால் அவன் அவ்விதம் பரீட்சையில் நித்திய ஜீவனோடு நிறுத்தப்படாது, பூரண ஜீவனோடு நிறுத்தப்பட்டான். அவனது கீழ்ப்படியாமை, பொதுவாக கிறிஸ்தவர்கள் நம்புகிற நித்திய (நரக) வேதனையைக் கொண்டு அல்லாது, மரணத்தைக் கொண்டு தண்டிக்கப்பட வேண்டியதாயிருந்தது. அப்படிப்பட்ட (நரக) நித்திய வேதனை சாபத்தில் கொடுக்கப்படவில்லை, மரணம் மட்டுமே தண்டனையாகக் கொடுக்கப்பட்டது.

9. கிறிஸ்தவர்கள் பாவிக்கு தண்டனை நரகத்தில் நித்திய வேதனை என்று போதிக்கிறார்கள். வேதாகமம் அவ்விதம் ஒருபோதும் போதிக்கவில்லை. பாவிக்கு - பாவத்துக்கு தண்டனை மரணம் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. ரோம 6:23இல் “பாவத்தின் சம்பளம்

மரணம்" என்று பவுல் அப்போஸ்தலன், மனுக்குலத்துக்கு ஆதியில் கொடுக்கப்பட்ட அசல் சாபத்தின் சிந்தனையை மறுபடியும் எடுத்துக் கூறுகிறார். 1கொரி 15:56 இல் மரணத்தின் கூர் பாவம் என்று மறுபடியும் தெரிவிக்கிறார். எசேக் 18:4-20இல் பாவம் செய்கிற ஆத்துமா சாகும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கிறோம்.

10. ஜீவ ஆத்துமாவான ஆதாம் - ஜீவிக்கிற ஆத்துமாவாகிய (living soul) ஆதாம் - கீழ்ப்படியாது தவறின நாளில், செத்துப் போனான். அதாவது ஒருநாள் தேவனுக்கு ஆயிரம் வருஷமாயிருக்கிறது 2பேது 3:8. அதன்படி கீழ்ப்படியாது போன அதே நாளில், அதாவது ஆயிரவருட நாளில் 930 வயதில் (வருஷத்தில்) மரித்துப் போனான். சாதாரண மொழிபெயர்ப்பில், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று மொழியாக்கம் பண்ணப்பட்டிருக்கிறது ஆதி 2:17. அதன் அசல் எபிரேய வாசகத்தின்படி "அதை நீ புசிக்கும் நாளிலே செத்துக் கொண்டே சாவாய் (Dying thou shalt die) என்று இருக்கிறது. அதன்படி, ஆதாம் வயதாகி வயதாகி செத்துக் கொண்டே செத்து, அதே நாளில் அதாவது ஆயிர வருட கால நாளில் 930-வது வயதில் மரித்துப் போனான். (நரக வேதனைக்குச் செல்லவில்லை).

11. "ஆதாம் ஏதேனில் இருந்து விரட்டப்பட்டபோது இந்த மரண தண்டனை அவனில் கிரியை செய்து கொண்டிருந்தது. இந்த செத்துக் கொண்டேயிருந்த நிலையில் அவன் இருக்கும்போது, அவனுக்குப் பிறந்த அவனுடைய எல்லா குழந்தைகளும், இந்த மரண தண்டனையை சவதரித்துக் கொண்டன. அவ்விதம் மரண தண்டனை, எல்லா மனுக்குலத்தின் மேலும் வந்திருக்கிறது. ஆதாமுக்குள் மனுக்குலம் கீழ்ப்படியாமையினால் விழுந்து போயிற்று. அவ்விதம் ஒரு இயல்பான வழியில் ஆதாமின் மரணம் வந்தது.

12. ஏதேன் தோட்டத்தின் ஜீவ விருட்சங்களிலிருந்து தடுக்கப்பட்டு பிரிக்கப்பட்டதால், அவனுடைய பூரண ஜீவன் பூரணமற்றதாயிற்று, முடிவில் அது ஜீவன் இல்லாமல் போயிற்று. இந்தக் காலக்கட்டத்தில் பெற்றெடுக்கப்பட்ட மனுக்குலம், சவுக்குள்ளான நிலையில் நிற்க வேண்டியதாயிற்று. அவ்விதமே தொடர்ந்து இருக்கிறது. ஆதாமிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட மரணத்தின் வித்து, ஒவ்வொருவனுக்குள்ளும் இருக்கிறது. ஆதலால் உயிர்த்தெழுதல் என்று ஒன்று இருப்பதற்கு முன்பு அதாவது உயிர்த்தெழுதலுக்கு முன் நிகழ்வாக ஒரு மரணம் இருக்க வேண்டும். இந்த மரணம் முதல் மனிதனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் மனுக்குலத்தின் மேல் வந்தது.

2-வது முன் நிகழ்வு : எல்லோருக்கும் மீட்கும் பொருள்

13. மரணம் ஒரு தண்டனையாக இருப்பின் அதிலிருந்து உயித்தெழுந்திட, அந்த மரண தண்டனை நீக்கப்பட்டிருக்க வேண்டியது ஒரு முன் நிபந்தனை - அதன் விவரமாவது.

1கொரி 15:21,22ன் 2வது பாகத்தில், கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட மீட்கும் பொருள் (The Ransom) உயிர்த்தெழுதலுக்கு 2வது முன் நிகழ்வாக இருக்கிறதைக் நாம் காண்கிறோம். அதன் விளைவாக, ஆதாமின் பாவத்தினால் அனைத்து மனுக்குலமும் பாதிக்கப்பட்டது போல,

இந்த மீட்கும் பொருளைக் கொடுத்த அவரது வேலையாலும் இந்த மனுக்குலம் பாதிக்கப்பட்டு நிலைமாற்றம் அடையும். இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். நம்முடைய குற்றங்களுக்காக, பாவ நிவாரணம் செய்து ஒப்புரவாக்கினார். மலை போன்ற பாவத்தை உருகிப் போகச் செய்த பலியை, பிதாவுக்கு முன்பாகப் படைத்தார். அவருடைய மகிமையான பலி புண்ணியம் குறித்த வேலையில் முழு மனுக்குலத்தையும் பாதிப்படையச் செய்து, அவ்விதம் செயல்விளைவை உண்டாக்கும்.

14. இயேசுவின் உயிர்த்தெழுதல், மனுக்குலத்தை உயிர்த்தெழச் செய்வது, நடைமுறையில் சாத்தியமானது என்று நீருபிக்கிறது. அவர் மரணத்தில் இருந்தாரேயானால், மனுக்குலத்திற்கு எந்தவொரு நம்பிக்கையும் இருந்திருக்காது. ஆனால் நம்முடைய பரமபிதா அவருடைய குமாரனுடைய மீட்கும் பொருள் பலியை ஏற்றுக் கொண்டு அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். அவ்விதம் அவருடைய மரணம், பாவத்தை (பாவ ஆக்கினையை) திருப்தி செய்கிறதாயிருக்கிறது என்று நீருபிக்கிறது. குறித்த காலத்தில் மனுக்குலம், அவர் செய்து முடித்திருக்கிற இந்த வேலையால் பலனைப் பெற்றுக் கொள்ளும்.

15. அநேக மக்களுக்கு, ஏன் மனுக்குலம் தண்டனையின் கீழ்வந்தது என்று காணமுடியவில்லை. தேவனற்றவர்கள் தேவனுடைய வல்லமையை ஏற்றுக் கொண்டாலும், பாவம், கொடுமை, மரணம் மனுக்குலத்தை பாதிக்கும்படி அனுமதித்ததால் இருக்கும் தேவனுடைய நீதியையும், ஞானத்தையும், அன்பையும் மறுதலிக்கிறார்கள். இந்த மக்கள், ஆதாமின் மீறுதலினால் தேவன் பூரணமற்ற சூழலையும், வியாதியையும், பாவத்தையும், மரணத்தையும் மனுக்குலத்தை அழிக்கவும் அவர்களை நித்திய நித்தியமான வேதனைக்கு கொண்டுவரவும் அனுமதித்தாரேயானால், அவர் நீதியுள்ளவராய் இருக்கிறார் என்று கூறுகிறார்கள்.

16. ஆதலால் மனுக்குலத்தின் மேல் பாவத்தின் சம்பளமாக நித்தியமான வேதனை கொண்டு வரப்பட்டது என்றால், நாம் தேவனுடைய குணாம்சத்தை நேர்மையானதொன்றாய்க் காட்ட முடியாது. மனுக்குலத்தை அதன் குற்றத்தின் காரணமாய் இல்லாமலே மரண நிலைக்கு நுழையச் செய்தபின், நம்முடைய பரமபிதா மனுக்குலத்துக்கு அந்த மரண நிலையிலிருந்து தப்புவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கவில்லையாயின் நம்மால் அவருக்கு அதரவு அளிக்க முடியாது.

17. தேவன் தமது குணாம்சத்தை மெய்ப்பிக்கிறார். மனிதனின் திரளான கருத்துக்களிலிருந்து நாம் விலகி, தேவனுடைய வார்த்தை அவருடைய மகத்துவமான குணாம்சத்தை அவரது நீதி, ஞானம், அன்பு ஆகிய குண இயல்புகளோடு மெய்பித்துக் காட்டுகிறது என்று பார்ப்போம். நன்மை தீமையை தெரிந்து கொள்ளக்கூடிய சுயாதீன சித்தமுள்ள ஒரு பூரணமான சந்ததியை சிருஷ்டிப்பதே தேவனுடைய நோக்கமாயிருந்தது. மனுக்குலம் தீமையை தவிர்த்து நன்மையை தெரிந்து கொள்ளுதலை என்றென்றும் மெய்பித்து செயலில் காட்ட வேண்டும்.

18. தேவன் எவ்விதம் மனிதனின் இந்த சுயாதீன வழிமுறையை மதிக்கச் செய்து, அதே சமயம் மனுக்குல சந்ததியை நித்திய ஜீவனுக்குள் கொண்டு வரமுடியும்? இதுவே நமது பரமபிதாவுக்கு முன் தோன்றின பிரச்சனையாகும். மனுக்குலத்தை பரிபூரணத்துக்குக் கொண்டுவர, முதலாவது தீமையோடு ஒரு அனுபவத்தையும், பின்பு நன்மையோடு ஒரு அனுபவத்தையும், அதன்பின் அவர்களுக்கு தனிப்பட்ட ஒரு சோதனையையும் கொடுப்பது அவசியம் என்பதை முன்கூட்டியே கண்டார். தீயினாற் சுடப்பட்ட குழந்தை தீயைக்கண்டு திகிலடைவது போல, அந்த தத்துவத்தின்படி மனுக்குலம் தேவனுடைய ஞானமான பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியும்படி என்றென்றும் தெரிந்து கொள்ளும். ஆகவே மனுக்குலம் பாவத்தோடு அனுபவத்தைக் கொண்டதாயிருக்கிறது. அதனைத் தொடர்ந்து (1000 வருட யுகத்தில்) நீதியின் அனுபவத்தைப் பெறவிருக்கிறது. இதன்பின் (சொற்ப காலத்தில்) மனுக்குலம் நித்திய ஜீவனுக்கான பரீட்சையில் வைக்கப்படும்.

19. ரோம 11:32 இல் பவுல், "தேவன் எல்லோரையும் பாவத்தோடுள்ள அனுபவத்தின் கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப் போட்டார்" என்று கூறுகிறார். எல்லோரும் இரக்கத்தோடுள்ள அனுபவத்தை பின்பு பெறும்படிக்கு எல்லோரையும் பாவத்தின் கீழ் தேவன் வைத்து வைத்தார். ரோம 8:20,21 இல் தேவனுடைய புத்திரர்களுக்குரிய மகிமையான சுயாதீனத்துக்கு விடுதலையாகும்படிக்கு மனுக்குலமானது மாயைக்கு கீழ்ப்பட்டிருக்கிறது என்றும், அவ்விதம் மனுக்குலம் சாபத்துக்குள் சுய இஷ்டத்தினால் அல்லாமல் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் கூறுகிறார். எது மனுக்குல சந்ததியிடம் கலந்தாலோசிக்கப்படவில்லை. ஆதாம் மட்டும் அந்த வாய்ப்பைப் பெற்றிருந்தான்.

20. அவ்விதம் தேவன் செய்ததில், அவர் கருத்தில், ஒரு நோக்கையுடையவராயிருந்தார். பாவத்திலிருந்தும் மரண அடிமைத்தனத்திலிருந்தும் கிறிஸ்துவின் மூலம், சுவிசேஷ யுகத்தில் தெரிந்து கொள்ளப்பட்ட விசுவாசமாயிருந்த கூட்டமாகிய சபையின் மூலமும், மனுக்குலத்தை விடுவித்தலை மனதில் நோக்கமாய் கொண்டிருந்தார். இயேசுவும், சபையும் மனுக்குலத்தை விடுவிக்கிறவர்களாக இருப்பார்கள்.

## தீமையை அனுபவித்தல்

21. ஏன் தேவன் இந்த திட்டத்தை தெரிந்து கொண்டார்? ஒருவனின் (ஆதாமின்) பாவம் எல்லோரையும் பாதிக்கும்படி ஏன் அவர் செய்தார்? நம்முடைய பரமபிதா, இந்தத் திட்டத்தின் மூலம் மற்றெந்த முறையையும் விட அதிகமானவர்களை மீட்க முடியும் என்பதைக் கண்டார். முடிந்தளவு அதிகமானவர்களை இரட்சிப்பதே அவரது நோக்கமாயிருந்தது. இரட்சிக்கப்பட்டவர்கள் அவர்களது இருதய சார்பு உண்மைகளைக் குறித்து பரீட்சிக்கப்பட வேண்டும். விசுவாச உண்மையை நிரூபித்தவர்கள் நித்தியமாய் வாழவேண்டும். விசுவாச உண்மையில்லாதவர்கள் மறுபடியும் இரண்டாம் மரணத்தில் சாகவேண்டும் என்பதாகும்.

## அன்பும் நீதியும் பழியிலிருந்து நீக்கப்படுதல்

22. ஒருவனுடைய பாவத்தினால் அநேகர் வேதனையடைவது நியாயமா? அவசரத்தில் தேவனுடைய திட்டத்தை பழித்துத் தீர்க்காதிர்கள். அதனை நாம் புரிந்து கொண்டால் தேவனுடைய அன்பை முன்பொருபோதுமில்லாத அளவுக்கு காணமுடியும். ஆதாமை படைத்தது போலவே எல்லா மனுக்குலத்தையும், பூரணமாக சிருஷ்டித்திருக்க தேவனால் முடியும். ஆனால் அவ்விதம் செய்யாது, அவர் செய்திருக்கும் விதத்தில் உன்னதமான ஞானத்தை அவர் காண்பித்திருக்கிறார் என்றும், அநேகருக்கு அவர் செய்திருக்கிறது ஒரு அன்னிய விநோதமான வேலையாயிருக்கிறது. தேவன் பூரணமான சந்ததியை உண்டாக்கி அவையனைத்தையும் பரீட்சைக்கு உடனே நிறுத்தினாரேயானால், அதன் முடிவு என்னதாயிருக்கும்? பாவத்தோடு அனுபவமில்லாததால் எல்லோரும் ஆதாமைப் போல மீறுதளுக்குள்ளாயிருப்பார்கள். தனிப்பட்டவர்களின் பாவம் தனிப்பட்டப் பொறுப்பைக் கொண்டு வருகிறதால் ஒவ்வொரு பாவிக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட ரட்சகர் தேவைப்படும்.

23. இதன்படி 50 கோடி மக்கள் பாவஞ்செய்திருந்தால் 50 கோடி ரட்சகர்கள் தேவை. தேவனுடைய திட்டம் அவசியமில்லாத அதிக பாடுகளை தவிர்த்து இரட்சித்திருக்கிறது. ஒரு பூரண மனிதன் பாவம் செய்தான். அது அவனது பிறவாதிருந்த சந்ததியின் மேல் மரணத்தைக் கொண்டு வந்தது. ஒரு பூரண மனிதன் அவனை மீட்டுக் கொண்டார். இவ்விதம் எல்லோரையும் ரட்சித்துக் கொண்டார். தேவன் மனுக்குலத்தை பாவத்தின் கீழாக்கி, அதன்பின்பு ஆதாமின் பதிலாளான இயேசுவால் அவர்கள் மீட்கப்படவிருக்கிறார்கள். தேவனுடைய நீதியின் பிரமாணம் ஆதாமின் ஜீவனை எடுத்துப்போட்டது. இயேசுவின் ஈடுகிரயமான (Corresponding Price) மீட்கும் பொருள் (Ransom - 1தீமோ 2:6) ஆதாமின் ஆக்கினையிலிருந்து (ரோம 5:12-19) முழு மனுக்குலத்தையும் விலைக்கு வாங்கிற்று.

24. ஆதாமின் மீறுதலை இயேசுவின் வேலை முழுவதும் நிவர்த்தி செய்துவிட்டது. ஆதாமினால் மனுக்குலத்துக்கு மேல் வந்த தண்டனையை இயேசுவின் பலி இல்லாமல் ஆக்கிவிட்டது. அவ்விதம் உயிர்த்தெழுதலின் தாற்பரியத்துக்கான முன்னிகழ்வுகள் தேவனுடைய நீதி, ஞானம், வல்லமை, அன்பு ஆகிய நான்கு உன்னத குண இயல்புகளையும், தேவனுடைய மகத்துவமான குணாம்சத்தையும் மெய்பித்து காண்பிக்கின்றன.

## நித்திய (நரக) வேதனை
## பாவத்தின் சம்பளம் அல்ல

25. பாவத்தின் சம்பளம் மரணம் (ரோம 6:23) பாவத்தின் சம்பளம் சரீர பிரகாரமாகவோ அல்லது மன நிலையிலோ நித்திய வேதனை என்றால் இயேசு அப்படிப்பட்ட வேதனையை நித்தியமாய் இப்பொழுதும் அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் வேத வாக்கியங்கள் இயேசு இயேசு மரித்தார், மறுபடியும் எழுந்தார் என்றே தெள்ளத் தெளிவாகப் போதிக்கின்றன. எல்லோருக்கும் மீட்கும் பொருள் என்ற கன்மலையாகிய தாற்பரியம்

நித்திய வேதனை எனும் பிசாசின் உபதேசத்தை சுக்கு நூறாக நொறுக்கி போடுகிறது. அந்த பிசாசின் உபதேசம் தேவனற்றவர்களையும், சிந்தனையில் வெறுப்படைகிற மக்களையும் தோற்றுவித்தது மட்டுமல்லாது, நமது தேவனுடைய குணாம்சத்தைத் தூஷிக்கிறது. இதற்கான உருவகப்படுத்தப்பட்ட அடையாளப்படுத்துதல்கள் உவமான போதனைகள் எல்லாம் எவைகளை அர்த்தப்படுத்த வேண்டுமோ அவைகளை அர்த்தப்படுத்தி விளக்குவதற்குப் பதிலாக இந்த பிசாசுகளின் தாற்பரியத்தை விளக்குவதற்கு கிறிஸ்தவ மண்டலங்களால் பயன்படுத்தப்படுகின்றன.

## உயிர்த்தெழுதலின் தன்மை

### எழுந்திருத்தலும் உயிர்த்தெழுதலும்

26. உயிர்த்தெழுதலுக்கான முன்னிகழ்வுகளைக் குறித்து தேவனுடைய பிள்ளைகளின் மனதில் அதிக மந்த அறிவும் குழப்பமும் இருக்கிறதுபோல, மகா அதிசயமான உயிர்த்தெழுதலின் தன்மையைக் குறித்தும் மந்தஅறிவும் குழப்பமும் இருக்கிறது. கிறிஸ்தவர்களிடம் உயிர்த்தெழுதல் என்றால் என்ன என்று கேட்டுப் பாருங்கள். அவர்கள் மரித்த நிலையிலிருந்து எழுதல் என்று கூறுவார்கள். அதற்கு உதாரணமாக லாசரு, யவீரு மகள், நாயீனூர் விதவையின் மகன் மரணத்திலிருந்து எழுப்பப்பட்ட மூன்று பழைய ஏற்பாடு சம்பவங்களையும் எடுத்துக் காட்டுகளாக தெரிவிப்பார்கள். ஆனால் இவைகள் உயிர்த்தெழுதல் அல்ல. அவைகள் உயித்தெழுதலாக இருக்குமாயின், வேதாகமம் தனக்குத்தானே முரண்பட்டிருக்கிறது. ஏனெனில் அப் 26:22,23 இல் பவுல், கிறிஸ்துவே மரித்தோரிலிருந்து முதல்முதலில் உயிர்த்தெழுந்தவர் என்று கூறுகிறார். இந்த பவுலின் கூற்றை மற்ற வேதபகுதிகளும் ஒத்து கூறுகின்றன.

27. இயேசுவே முதல் முதலில் உயிர்த்தெழுந்தார் என்றால் மேற்கண்ட 6 சம்பவங்களும் உயிர்த்தெழுதல் அல்ல என்று அறிகிறோம். அவைகள் எல்லாம் மரணத்திலிருந்து எழுதலேயாகும். உயிர்த்தெழுதல் என்றால் பூரணத்துக்கு எழுதலை அர்த்தப்படுத்துகிறது. அந்த 6 சம்பவங்களிலும் அவர்கள் மரிக்கும்போது இருந்த அதே பரிபூரணமற்ற நிலைக்கே எழுந்திருந்தனர். அந்த நிலையில் அவர்கள் மறுபடியும் தங்கள் காலாகாலங்களில் மரித்தனர். இதிலிருந்து, அவர்கள் மரணத்திலிருந்து எழுந்த போதிலும் ஆதாமின் மரண சாபம் அவர்களில் இருந்து நீங்கவில்லை என்று தெரிகிறது. ஆனால் நமது கர்த்தர் பூரண நிலையில் எழுந்தார். அவருடையதே உண்மையான உயிர்த்தெழுதலாகும்.

28. உயிர்த்தெழுதல் என்பது வீழ்ச்சி அல்லது குன்றிப்போதலுக்கு எதிர்மறையாகும். லூக் 20:27-38. சதுசேயர்கள், இயேசுவிடம் ஒரு சர்ச்சையை எழுப்பி, உயிர்த்தெழுதல் தாற்பரியத்தை இல்லாது ஆக்க நினைத்தனர். ஆனால் சிலந்திக் கூட்டை பெருக்கித் தள்ளுவது போல, நமது கர்த்தர் அதனை வெகு எளிதாக அகற்றிப்போட்டார். வச 34-36இல் கொடுக்கப்பட்டிருக்கிற அவரது பதில், உயிர்த்தெழுதலை பெறுவதற்கு அதனைப் பெறுகிறவர்கள் தகுதியுடையவர்களாய் இருக்க வேண்டும் என்ற சிந்தனையை ஆலோசனையாகத் தருகிறது.

29. யோவா 5:28,29 இன்படி எல்லோரும் மரண நிலையிலிருந்து எழுப்பப்படுவார்கள். எல்லா குடிகாரர்கள், கொலைபாதகர்கள், அக்கிரமச் செய்கைக்காரர் தேவ கோபாக்கினைக்கு தகுதியுள்ள எல்லோரும், எல்லா நல்ல ஜனங்களைப் போலவே மரணத்திலிருந்து எழுப்பப்பட்டாலும், உயிர்த்தெழுதலை உடனே அடைய மாட்டார்கள் என்பதை நிச்சயமாகத் தெரிவிக்கிறது. உயிர்த்தெழுதலையடைந்தவர்கள் தேவத்தூதர்களைப் போல பாவமில்லாது பூரணமாக தேவபுத்திரர்களாக இருப்பார்கள். ஏனெனில் அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாவார்கள்.

30. அக்கிரமச் செய்கைக்காரன் மரணத்திலிருந்து எழும்பும் பொழுது தேவனுடைய பிள்ளையாக இருக்க முடியுமா? இல்லை. அவன் பிசாசின் பிள்ளையாயிருப்பான் (யோவா 8:44). உயிர்த்தெழுதலைப் பெறுகிறவன் எபி 11:39,40 இல் காட்டப்பட்டிருக்கிறதின்படி சோதனையில் தேவனுக்கு முன்பாக உகந்தவனாக நற்சாட்சி பெற்று தகுதியாய் தேறியிருக்க வேண்டும். அப் 24:15இல் நீதிமான்களுக்கும் அநீதியானவர்களுக்குமுரிய மரித்தவர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்த நம்பிக்கையை பவுல் தெரிவிக்கிறார். மேலும் அவர், இஸ்ரவேலில் யார் அதனைப் பெற விரும்புகிறார்களோ அவர்களுக்கும் உயிர்த்தெழுதல் உண்டு என்று நம்புகிறதை தெரிவிக்கிறார்.

## உயிர்த்தெழப்படுதல் என்றால் என்ன?

31. அநேக கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுதலின் தாற்பரியத்தை புரியாது இருப்பது மட்டுமல்லாது எழுப்பப்படுதல் என்றால் என்ன என்பதையுங் கண்டு கொள்ளாதிருக்கிறார்கள். சபை மார்க்கத்தாரின் விசுவாசப் பிரமாணம், சரீரம் உயிர்த்தெழுதலைக் குறித்துக் கூறுகிறது. ஆனால் வேதவாக்கியங்கள் சரீரம் உயிர்த்தெழும் என்று போதிக்கவில்லை. ஆனால் 'ஆள்' 'இருத்தல்', 'உயிருரு' (Being) உயிர்த்தெழுதலைக் குறித்தே வேதாகமம் போதிக்கிறது. 1கொரி 15:35இல் பவுல், மரித்தவர்கள் எந்த சரீரத்தில் வருவார்கள் என்று கேள்வியை எழுப்புகிறார், அவரது பதில் கீழ்வருமாறு அமைகிறது. விதைத்த விதையானது ஒரு செடியாக வளருமுன் சாகவேண்டும். புதிய வளர்ச்சி அதன் விதையைக் கொண்டு வந்திருக்கிறது போல, நாம் நமது அசல் ஜீவனை அதே சரீரத்தில் அல்ல ஆனால் மரித்த சரீரத்துக்கு ஒப்பான மற்றொரு சரீரத்தில் கொண்டவராயிருப்போம். ஆகவே, இது மரித்தவர்களின் உயிர்த்தெழுதலாகும். அதே சரீரம் திரும்பிவராது என்று நம்முடைய பொது அறிவே போதிக்கிறது.

## உயிர்த்தெழுதலின் வகைகள்

இருகூட்டத்தார் எழுப்பப்படுதல்

32. பவுல் தமது உயிர்த்தெழுந்த இரு சரீரங்களுக்குரிய வித்தியாசங்களைத் தெளிவுப்படுத்துகிறார். ஒன்று சுபாவ சரீரம் (Natural Body), மற்றொன்று ஆவிக்குரிய சரீரம் (Spiritual Body) ஆகும். நாம் இப்போது கொண்டுள்ள சரீரத்தை விட மேன்மையான சரீரத்தை நமக்கு நமது பிதா தருவார் என்பதற்காக களிகூருவோமாக. நமது பாடவசனத்தில் பவுல்

இருவிதமான உயிர்த்தெழுதலை தெரிவிக்கிறார். வச.23 “முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். “Christ the first fruits, afterwards they that are christ’s at His coming (Presence - Parousia)” ஆங்கில வசனத்தில் முதற்பலனானவர்கள் (முதற் கனிகள் - First Fruits) என்று பன்மையில் கொடுக்கப்பட்டிருக்கிறதைக் கவனியுங்கள். தமிழ் வேதாகமத்தில் பன்மையில் இல்லாது ஒருமையில் கொடுக்கப்பட்டிருக்கிறது இது தவறு. கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் கிட்டத்தட்ட 25வருடங்கள் கழித்து பவுல் இதனை எழுதுகிறார். வசனம் 20இல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து தெரிவிக்கிறார். ஆனால் 23ல் பவுல், கிறிஸ்து வகுப்பாரைக் குறித்து அதாவது மணவாட்டி சபையாகிய கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களைக் குறித்து முதற்பலன்கள் (முதற்கனிகள்) உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று பன்மையில் கூறுகிறார். அதன்பின்பு அவர் வந்திருத்தலில் கிறிஸ்துவினுடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

33. இந்த முதற்பலன்களில் நமது கர்த்தர் மட்டுமல்லாது தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சரீரமாகிய 1,44,000 பேரும் உண்டு. (வெளி 14:1-5; யாக் 1:18; ரோம 8:17). முதற்பலன்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் (வெளி 20:6) பங்கு கொண்டவர்கள். இது இயேசு கிறிஸ்துவில் ஆரம்பித்தது. அவரது சரீரம் ஆபிரகாமின் வித்தின் பிரதானமான பங்காகும். (கலா 3:16,29) இவர்கள் இயேசுவோடு முதலாம் உயிர்த்தெழுதலில் மாம்சமும் ரத்தத்தோடுமல்லாது திவ்விய சுபாவத்தில் (தெய்வீக சுபாவத்தில் Divine Nature 2பேது 1:4) உயிர்த்தெழுதலை அடைகிறவர்கள் ஆவர். இந்த மகிமையான வெகுமதி தங்கள் புகழையும், தங்கள் லாபங்களையும், ஜீவனையும் பலி செய்து கிறிஸ்துவோடு பாடுபட்டதற்கு தகுந்ததாயிருக்கிறது.

**இரண்டாம் உயிர்த்தெழுதல்**

34. இரண்டாம் உயிர்த்தெழுதலும் 1கொரி 15:21-23 இல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரக்கத்தை தேவன் வைத்து வைக்கவில்லையாயின், முதலாம் உயிர்த்தெழுதலில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மாத்திரம் ரட்சிக்கப்படுவார்களேயாயின், இரண்டாம் உயிர்த்தெழுதல் அவசியமிருந்திருக்காது. 1கொரி 15:23 இன் கிரேக்க வாசகத்தின்படியான கருத்து ஆங்கில மொழி பெயர்ப்பிலோ துல்லியமாய் அமையவில்லை. இதில் வருகிற கிரேக்க வார்த்தை பரூஷியா (Parousia) இங்கு ‘வருகையில்’ என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த பரூஷியா என்பதற்கு வந்திருத்தல் (Presence) என்று பொருள். (யங்க்ஸ் வேத சொல்லகராதியில் young’s concordance - பக்கம் 188இல் coming என்பதற்கான 7வது பொருளைக் காணவும்).

35. இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் வந்திருக்கும்போது, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு கொண்ட தமது சபையாகிய 1,44,000 பரிசுத்தவான்களோடு 1000 வருடம் ஆளும்போது, இரண்டாம் உயிர்த்தெழுதல் நிறைவேறும் என்று வேதாகமத்தின் மற்ற பகுதிகள் போதிக்கின்றன. யோவா 5:28,29 இரண்டு உயிர்த்தெழுதலைப் பற்றி போதிக்கிறது. பூரணத்துக்கு உடனடியாக எழும்புகிற உயிர்த்தெழுதலையும், நியாயத்தீர்ப்புக்கு

எழும்பியிருக்கிற உயிர்த்தெழுதலையும் குறிப்பிடுகிறதை கவனியுங்கள். "தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருப்பார்கள்" என்ற மொழியாக்கம் சரியில்லை. அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் மொழியாக்கத்தின்படி (American Standard Version) தீமை செய்தவர்கள் நியாயத்தீர்ப்பு அடையும்படி எழுந்திருப்பார்கள் என்று அமைய வேண்டும். ஏசா 26:9 இல் கூறியிருக்கிறபடி பூச்சக்கரத்து குடிகள் (தீமை செய்தவர்களும்) நீதியைக் கற்றுக் கொண்டு ஜீவனுக்காக பரீட்சைக்கு எழுந்து வருவார்கள். உலகம் நீதியை இன்னும் கற்றுக் கொள்ளாததால் இது வரவிருக்கும் காலத்துக்குரிய வேதபகுதியாகும். ஏனெனில் உலகம் இன்னும் நீதியை கற்றுக் கொள்ளவில்லை. வரவிருக்கிற இயேசுவின் 1000 வருட ராஜ்ஜியத்தில் இது நிகழ்பெறும். ஏசா 11:1-10; 35:1-10; 2:2-5.

## அக்கிரமக்காரர் தண்டிக்கப்படுவர்

36. அக்கிரமக்காரர் தண்டிக்கப்படாமல் விட்டுவிடப்படுவார்கள் என்று நாங்கள் போதிக்கவில்லை. தேவவார்த்தை நித்திய (நரக) வேதனையை தண்டனையாக ஒருவருக்கும் போதிக்கவில்லை என்று கூறும்போது, ஒவ்வொரு பாவமும் தண்டிக்கப்படும் என்று தெளிவாகக் காட்டுகிறது. பாவிகள் போதுமான தண்டனையாக சவுக்கடியை பெறுவார். அக்கிரமச் செய்கைக்காரர்கள் நியாயத்தீர்ப்புக்கு (நிதானித்தறியும் அறிவுக்கு - Judgement) கொண்டு வரப்படுவர். அதில் ஒவ்வொருவனும் சிட்சைகளினால் திருத்தப்படுவான். இதில் அவர்கள் மனம்மாறி திருந்துவார்கள். (ஏசா 2:4) அல்லது ஜீவனுக்கு தாங்கள் தகுதியில்லை என்பதைக் காட்டுவார்கள். அவ்விதம் ஜீவனுக்கு தகுதியற்றவர்கள் மறுபடியும் ஜீவனை இழந்துவிடுவர். இதுவே அவர்களுக்கு இரண்டாம் மரணமாகும்.

37. வேதவாக்கியத்தின்படி 1000வருட ஆட்சியின் காலமே நியாயத்தீர்ப்பு நாள் (நிதானித்தறியும் நாள்) ஆகும். (லூக் 21:34; 1தெச 5:2; 2பேது 3:10) நியாயத்தீர்ப்புக்கு (நிதானித்தறிதலுக்கு Judgement) பிறகு 1000 வருட ஆட்சிக்கு ஒரு அவசியம் இல்லை. அதுபோல 1000வருட ஆட்சிக்குப் பின்பு நியாயத்தீர்ப்பு (நிதானித்தறியும்)-Judgement நாளுக்கு அவசியமிராது. ஒவ்வொன்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கும். நியாயத்தீர்ப்பு (நிதானித்தறியும்) நாளும் 1000வருட ஆட்சியும் ஒரே காலமும் ஒரே காரியமாயும் இருக்கிறதை வேத வாக்கியங்கள் கூறுகின்றன. (2பேது 3:7,8) ஆயிர வருட ஆட்சியில் இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் பலனான மனுக்குலத்துக்குரிய எல்லா ஆசீர்வாதங்களும் அவர்களுக்குக் கிடைக்கும். இதுவே அவர்கள் நீதியை நிதானித்தறிதலைப் பெறுகிற நியாயத் தீர்ப்பு (Judgement - நிதானித்தறியும்) நாளாகும்.

38. 1கொரி 6:2இல் பரிசுத்தவான்கள் 'உலகத்தை' நியாயந்தீர்ப்பார்கள் என்று படிக்கிறோம். சபையை (மணவாட்டி சபையான 1,44,000 பரிசுத்தவான்களை எபி 12:23; வெளி 14:1) (ராஜாக்கள் என்று வெளி 1:6 இல் அழைக்கப்பட்டிருக்கிறது). அவ்விதம் சபையானது நியாயத்தீர்ப்பையும், ஆளுகையையும் செய்வார்கள். 2தீமோ 4:1 இலும் மத் 19:28 இலும் இதே கருத்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

## நியாயத்தீர்ப்பு நாள்
## மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும்

39. இந்த நியாயத்தீர்ப்பு நாள் மிகவும் அதிகமான ஆசீர்வாதங்களை மனுக்குலத்துக்குக் கொண்டுவரும். (நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றி விவரமாய் அறிய விரும்புகிறவர்கள் எங்களுக்கு எழுதினால் அதைக் குறித்த சிறுபுத்தகம் ஒன்றை அனுப்பி வைப்போம்). பூமி கர்த்தரைப் பற்றும் அறிவினால் நிறைந்திருக்கும் (ஏசா 11:9; ஏரே 31:34; எபி 8:11,12) "வனாந்திரமும் புஷ்பத்தைப் போல் செழிக்கும்" (ஏசா 35:1) அப்பொழுது "கொழுமையான பதார்த்தங்களான" விருந்து இருக்கும். மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டிருக்கும். (ஏசா 25:6-9) எல்லோரும் கர்த்தரை (யாவே தேவனை) அறிவார்கள். (ஏரே 31:34; சங் 83:17). அப்பொழுது குருடரின் கண் திறக்கப்பட்டிருக்கும் (ஏசா 35:5,6).

40. சுவிசேஷயுகத்தில் மனுக்குல ஜனங்களிலிருந்து தம்முடைய நாமத்திற்காக (வெளி 14:1) ஒரு ஜனத்தை தெரிந்து கொள்ளுவதே தேவனுடைய தீர்மானமாகும். (அப் 15:14-17) இந்த தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம் கிறிஸ்துவின் மணவாட்டியாய் சபையாயிருக்கிறார்கள். கலா 3:8இல் சுவிசேஷத்தின் வேதவிளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பவுல் கூறுவதைக் கேளுங்கள். "தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறார் என்று வேதம் முன்னாகக் கண்டு உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு சுவிசேஷமாய் முன்னறிவித்தது". (ஆதி 12:3) சுவிசேஷம் என்றால் என்ன விளக்கத்தில், அங்கு எந்தவொரு கருத்தும், பிசாசைக் குறித்தும் (நரக) ஆக்கினையைக் குறித்தும் நரகத்தில் தூக்கியெரியப்படுதலைக் குறித்தும் கூறப்படவில்லை.

41. தேவன், ஆபிரகாமோடு அவர் செய்த உடன்படிக்கையை சுவிசேஷம் என்று கூறுகிறார். சுவிசேஷ யுகத்தில் ஆபிரகாமின் வித்து தெரிந்து கொள்ளப்பட்டது. (கலா 3:16,29 - **seed** - வித்து). அந்த வித்து தெரிந்து கொள்ளப்பட்ட பின்பு மனுக்குலத்துக்கு ஆசீர்வாதம் வருகிறது. எசே 37:1-14 இல் இஸ்ரவேலர்களின் உயிர்த்தெழுதலைப் பற்றிய தீர்க்கத் தரிசன விளக்கம் இருக்கிறது. எசே 16:55-62இல் சோதோம் கொமரா உட்பட எல்லா ஜனங்களும் அவர்களது மரணச் சிறையிலிருந்து விடுவிக்கப் படுவார்கள் என்று தெரிவிக்கிறது.

42. அவ்விதம் தேவனுடைய குணாம்சம் பூரணமாய் முற்றிலும் மெய்ப்பிக்கப்படும். அவ்விதம் அவரது மகத்தான ஞானம், நீதி, வல்லமை, அன்பு ஆகியவைகள் மெய்ப்பித்துக் காட்டப்பட்டிருக்கும். பாவம் என்றென்றும் ஒருபோதும் இராது. தேவன் சிருஷ்டித்த ஜனங்கள் என்றென்றும் அவரையே தொழுது கொண்டு அவரது நீதியான பிரமாணத்துக்குக் கீழ்ப்படிவார்கள் (செப் 3:9).

RESURRECTION - BS 756:17-22